ரூபாய்க்குப் படி அரிசி திட்டம்

*313. வின.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு உணவு, வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு ரூபாய்க்கு ஒருபடி அரிசித் திட்டத்தை நெல்லைமாவட்டத்திலுள்ள சாத்தான்குளம் தொகுதி போன்ற நஞ்சை நிலங்களதிகமில்லாத பகுதிகளுக்கு நடப்பு ஆண்டிலாவது விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் தற்சமயம் தமிழ்நாடு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) அந்தமாதிரித் திட்டம் இப்போது கிடையாது.

திரு. டி. மார்டின் : நஞ்சை நிலம் அதிகமில்லாத பகுதிகளிலும் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலும்—சென்னை கோவையைப் போல தூத்துக்குடி சப் தாலுக்கா, ராதாபுரம் சப் தாலுக்கா, சாத்தான்குளம் சப் தாலுக்கா ஆகிய இடங்களுக்கு 1972-ஆம் வருஷத்திற்கு முன்னதாவது பரீட்சார்த்தமாகப் படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னையிலும், கோவையிலும் குடும்பக் கார்டு திட்டத்தை வைத்திருந்தார்கள். ஆகவே உடனடியாக இங்கே படி அரிசித் திட்டத்தைக் கொண்டுவந்தோம். மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று நாம் விரும்பினலும் இன்றைக்கு இருக்கிற வறட்சி நிலை, நிதிநிலை ஆகியவற்றின் காரணமாக இப்போதைக்கு இதை விரிவுபடுத்துவதற்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தப் படி அரிசித் திட்டம் சென்னையிலும் கோவையிலும் இருக்கிற காரணத்தினல் கிராமங்களில் இருந்து பெருவாரியான மக்கள் நகரத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிருர்கள். அதனல் இங்கே ஜனத்தொகை கூடுகிறது. ஆகவே இதைக் குறைக்க மற்ற இடங்களுக்கும்—ஆர்கனைஸ்டு லேபரர்ஸ் என்ற அடிப்படையில் தொழிலாளர்கள் இருக்கும் பகுதிக்கும் படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தெளிவாகப் பலமுறை கூறிய பிறகும் இதைப்பற்றிக் கேட்பதற்கு ஒன்றும் இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்தப் பிரச்சினை எழவில்லை என்றுதான் சொன்னேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know whether this Government will come forward to issue one-rupee-a-measure-rice to the drought-affected areas of our State especially like the Hosur taluk in the Dharmapuri district which has been worst hit by drought for the last four years ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வறட்சியான பகுதிகளுக்கு ஏற்கெனவே நெல்லாக, கோதுமையாக, சோளமாக தானியங்கள் வழங்கப் பட்டுவருகின்றன. அங்கே படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு இடங்களுக்கு படி அரிசித் திட்டத்தை விஸ்தரிக்க வழியில்லை என்று சொன்ன பிறபாடு-எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுமா, எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்படுமா என்று கேட்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : படி அரிசித் திட்டத்தினால் இந்தச் சர்க்காருக்கு 8·73 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகக் காணப்படுகிறது. மேலும் படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பதினால் எத்தனை கோடி நஷ்டம் ஏற்படும் ? அப்படி விஸ்தரிப்பது இப்போது சாத்தியமா ? (திரு. கே. வினயகம் :—நூறுகோடி).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : படி அரிசித் திட்டத்தினால் 8·73 கோடி நஷ்டம் என்பது தவறானது. அது பலமுறையும் இந்த மன்றத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. எட்டுகோடி சொச்சம் நஷ்டம் என்று மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற எந்த தஸ்தாவேஜிகளிலும் காண முடியாது. சென்னை, கோயம்பத்தூர் பகுதி மக்களுக்கு படி அரிசித் திட்டம் அளிப்பதனால் 40 லட்சம் மக்களுக்கு 4 கோடிதான் ஆகிறது. ஆனால் நான் முன்பு குறிப்பிட்டபடி 42 ரூபாய் அரிசிக்கு 3 ரூபாய் போனஸ் என்று சேர்த்துக் கொடுப்பதனால்

—that is not passed on to the consumer—

பாக்கியுள்ள தொகை எல்லா ஊர்களிலும் உள்ள விவசாய மக்களுக்குத்தான் கொடுக்கிறோம். எல்லா ஊர்களிலும் உள்ள மக்களுக்கு அந்த நன்மை போய்ச் சேருகிறது.

அடுத்து படி அரிசித் திட்டம் இரண்டாம் ரக நெல்லைப் பொறுத்துத் தான் முதல் ரக அரிசிக்குக் கிடையாது. இரண்டாம் ரக அரிசி உற்பத்தியும் இப்போது குறைவாக இருக்கிறது. இன்றைக்கும் தமிழ்நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினை படி அரிசித் திட்டத்தை விஸ்தரிப்பது என்பதல்ல வறட்சி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் உணவு தானியங்களின் விலை ஏறிவிடாதிருக்க கட்டுப்பாடான விலையில் மக்களுக்கு தானியங்கள் கிடைக்கும்படி செய்வதுதான்.

Scale of pay of Librarians

* 314 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the scale of pay of Librarians in Government Colleges are likely to be revised on a par with U.G.C. scales ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இவ்விஷயம் பரிசீலனையிலிருக்கிறது.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவப்படி

***315 வினு—திரு. எம். பூபதி :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த வைத்திய அலவன்சை 1958-ம் ஆண்டுக்குப் பின் நிறுத்திய காரணம் என்ன ?

(இ) ஆசிரியர்கள் பெற்று வந்த இந்தச் சிறு சலுகையை மீண்டும் அளிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எந்த விதமான வைத்திய அலவன்சும் எந்த காலத்திலும் அளிக்கப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.